# முடக்கப்பட்ட நிலையில் பிள்ளைகள்

## ஸ்டேஜஸ் தியேட்டர் குரூப்

கேஎன்ஹைச் ஆதரவுடன்
கலைஞர்களை பணியமர்த்துதல்.

stages theatre group

kinder not hilfe

***ஸ்டேஜஸ் தியேட்டர் குரூப்*** என்பது சமூக அரசியல் ரீதியாக சவால்விடுக்கின்ற, இலங்கை நாட்டுக்கேயுரிய மேடை கலைகளை ஊக்குவிக்கும் நோக்குடன் 2000 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஒரு கலை நிறுவனமாகும். இந் நிறுவனமானது, கோவிட் 19 தொற்று பரவல் காரணமாக பிள்ளைகள் எதிர்நோக்கும் சவால்களை எதிர்கொள்ளும் வகையிலான கலைப் படைப்புகளை பங்களிப்பு செய்யுமாறு இலங்கை கலைஞர்களுக்கு அழைப்புவிடுப்பதில் பேருவகை கொள்கின்றது.

முடக்கப்பட்ட நிலையில் பிள்ளைகள் (Children in Lockdown) என்பது, குழந்தைகள் தொற்று நோய் சூழ்நிலையில் எதிர்கொள்ளும் சவால்களை எதிர்கொள்ள உதவ அல்லது வளர்ந்தவர்கள், குழந்தைகள் தொற்றுநோய் சூழலில் எவ்வாறான நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள் என்பதனை புரிந்துகொள்ள உதவும்படியாக கலைஞர்களை ஊக்குவிக்கும் ஒரு திட்டமாகும்.

முடக்கப்பட்ட நிலையில் பிள்ளைகள் திட்டமானது கலைஞர்களுக்கு:

1. தொற்றுநோய் சூழலில் குழந்தைகள் எதிர்நோக்குகின்ற சிக்கல்கல்களை மையப்படுத்தி கலைப் படைப்புகளை தயாரித்தல். (எடுத்துக்காட்டாக: நாடகங்கள் / நூல்கள் / கட்டுரைகள் / கலைப்படைப்புகள் / திரைப்படங்கள் / இசை / ஆய்வு)

2. குழந்தைகள், வளர்ந்தவர்கள், மற்றும் குழந்தைகளுக்கு உதவுகின்ற நிறுவனங்கள் (பள்ளிகள், சிறுவர் விடுதிகள், நிறுவனங்கள்) என்பவற்றுக்கு தொற்றுநோய் சூழலில் ஏற்படுகின்ற சவால்களை எதிர்கொள்ள உதவும் வகையிலான செயலமர்வுகளை நடாத்துதல். என்பவற்றுக்காக கொடுப்பனவுகளை வழங்கும்.

முடக்கப்பட்ட நிலையில் பிள்ளைகள் கொடுப்பனவுகள் பற்றிய முக்கிய தகவல்கள்.

- இது நிர்வகிக்கப்பட்ட திட்டமாக இருக்கும்
- 2 -6 மாத காலப் பகுதிக்குள் கலைப் படைப்புகள் முற்றுப்பெற வேண்டும்.
- கொடுப்பனவு தொகைகள் இலங்கை ரூபாயில் 100000, 300000, 500000ஆகும்.
- அனைத்து இலங்கை கலைஞர்களும் விண்ணப்பிக்க தகுதியானவர்கள் ஆவர்.
- சிறுவர் கலைஞர்கள் விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகின்றனர்.

தேவைப்பாடுகள்

- திட்டமானது கலைஞர் முன்னின்று நடத்தப்படுவதாக இருக்க வேண்டும்.
- குழந்தைகள் திட்டங்களை பிரேரிக்க முடியும்.
- மேடைக்கலை, பிரதியாக்கம், திரைப்படங்கள், இணைய வெளியீடுகள், மொழிபெயர்ப்பு, செய்முறைக் கலைகள், காட்சிக் கலைகள், ஓவியமும் சிற்பமும், கற்பனை மற்றும் கற்பனையற்ற எழுத்து, கலைத்துறை ஆய்வுகள், இசை ஆகியதுறைகளுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
- செயலமர்வுகள் நடத்துவதற்காகவும் கலைஞர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
- புதிய படைப்புக்களை உருவாக்க இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு கலைஞர்கள் ஊக்குவிக்கப்படு
- இந்த தொனிப்பொருளில் ஏற்கனவே சுயமாக தயாரிக்கப்பட்ட அனால் இன்னும் வெளியிடப்படாத படைப்புக்களும் சமர்ப்பிக்கப்படலாம்.
- திட்டத்திற்கு முன்பதாக கலைஞர்கள் ஒரு பயிற்சி வகுப்பிலும், திட்டத்திற்கு பின்னர் ஒரு மதிப்பீட்டு கலந்துரையாடலிலும் பங்குபற்றவேண்டும்.
- கலைஞர்களுடைய படைப்புக்கள் ஆவணப்படுத்தப்படும்.
- கலைஞர்கள் தங்கள் படைப்புக்கள் பொதுவாக கிடைக்கும் படி ஆவனசெய்ய வேண்டும்.

**விண்ணப்பிக்கும்முறை**

1. தொடக்க முன்மொழிவுகளை கையளித்தல் - 5 மார்ச் 2021
உங்களது எண்ணக்கரும மற்றும் நீங்கள் எதிர்பார்க்கும் கொடுப்பனவை (ரூ. 100000, 300000, 500000) எங்களுக்கு தெரியப்படுத்தி ஒரு தொடக்கதிட்ட வரைவை அனுப்ப வேண்டும். இந்த தொடக்க விண்ணப்பம் பின்வருகின்ற எந்த வழியிலேனும் அனுப்பப்படலாம் (எழுத்துமூலம், பேச்சுமூலம், படங்கள், காணொளிகள் மற்றும் ஏனைய...)

ஒவ்வொரு விண்ணப்பமும் நிர்வாகிகளால் கவனமாக பரிசீலிக்கப்படும். உங்களது விண்ணப்பத்தின் வலிமை, தனித்தன்மை, ஆக்கத்திறன் மற்றும் தொற்றுநோய் காலத்தில் குழந்தைகளுக்கு ஏற்படுகின்ற சிக்கல்கள் குறித்த புரிந்துணர்வு என்பவற்றின் அடிப்படையில் தெரிவு இடம்பெறும்.

சிறியதும் பெரியதுமான கலப்பில் நன்கொடைகள் பகிர்ந்தளிக்கப்படும் என்பதால் நீங்கள் தெரிவுசெய்யப்பட்டாலும் சில வேளைகளில் நீங்கள் கேட்ட தொகை உங்களுக்கு கிடைக்கப்பெறாமல் போகலாம். அது நீங்கள் கேட்ட தொகையிலும் குறைவாகவோ கூடுதலாகவோ இருக்கலாம். சில வேளைகளில் நீங்கள் உங்கள் எண்ணக்கருவை விரிவாக்கவோ குறுக்கவோ கேட்கப்படலாம். இவை நிர்வாகிகளால் முடிவுசெய்யப்படும்.

2. தொடக்கத் தெரிவும் சூம் (ஜூம்) கலந்துரையாடலும் (மார்ச்1 ஆம்- 2 ஆம் வாரங்கள்)
உங்கள் எண்ணக் கருவினால் நாங்கள் கவரப்படும் பட்சத்தில் உங்களுடனான சூம் கலந்துரையாடலொன்று மார்ச் 12 ஆம் திகதிக்கு முன்னர் ஒழுங்கு செய்யப்படும். உங்களுடைய கருத்துக்கு பின்னல் உள்ள நோக்கு மற்றும் வாஞ்சை பற்றி நான்காம் அறிந்து கொள்ள இது ஒரு வாய்ப்பாக அமையும். எங்களைப் பற்றி இன்னும் தெரிந்துகொள்ள உங்களுக்கும் அது ஒரு வாய்ப்பாக அமையும். இந்த கலந்துரையாடலின்போது நீங்கள் தெரிவு செய்யப்பட்டால் உங்கள் விண்ணப்பத்தை இன்னும் விரிவாக்க வேண்டப்படுவீர்கள்.

3. விரிவான முன்மொழிவுகளை கையளித்தல் (மார்ச் 3 ஆவது வாரம்)
இரண்டாம் கட்ட தெரிவுகளுக்காக நீங்கள் இன்னும் விரிவான, கட்டுக்கோப்பான கோட்பாடு குறிப்பு ஒன்றை கையளிக்க வேண்டியிருக்கும். அது உங்களுடைய கலை நோக்கம் (ஏன் இந்த திட்டத்தை செயற்படுத்த விரும்புகின்றீர்கள்), யாருடன் பணிபுரிய விரும்புகின்றீர்கள் (இலக்குகுழுக்கள்), உங்களுடன் பணிபுரியும் குழுவினர் அல்லது உதவியாளர்கள் (இருப்பின்) அவர்களது அறிமுகம், உங்களுடைய கலைப் படைப்புகளுக்கு செலவாகக்கூடிய அண்ணளவான காலப் பகுதி மற்றும் செலவுகள் குறித்துரைக்கப்பட்ட அண்ணளவான செலவுத் திட்டம் என்பவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். இந்த தகவல்களை எமக்கு வழங்குவதற்கான மாதிரிகள் உங்களுக்கு வழங்கப்படும். தெரிவு செயன்முறையின் இந்தப் பகுதி உங்களுடைய திட்டத்தை செயற்படுத்த உங்களுக்கு உள்ள ஆற்றலை மதிப்பிடுவதாக இருக்கும்.
இங்கு உங்களுடைய ஒருங்கிணைக்கும் ஆற்றல், பொறுப்புணர்வு மற்றும் நம்பகத் தன்மை என்பவை மதிப்பிடப்படும்.

4. இறுதி பணியமர்த்துதல் அறிவிப்பு (ஏப்ரல் முதல் வாரம்)
உங்களுடனான உரையாடல்கள், மதிப்பீடுகள் யாவும் திருப்தியளிக்கும் பட்சத்திலும், நீங்கள் எங்களுடன் பணிபுரிய விரும்புகின்ற பட்சத்திலும் உங்களை முடக்கப்பட்ட நிலையில் பிள்ளைகள் திட்டத்தின் ஒரு கலைஞராக உறுதி செய்வோம்.

நீங்கள் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் உங்களுடைய இறுதி செய்யப்பட்ட திட்டத்தின் வடிவம், காலக்கெடுபற்றிய இணக்கம், தொடர்ச்சியான கலந்துரையாடல்களுக்காக நேரம் ஒதுக்குதல், மற்றும் தயாரிக்கப்பட இருக்கின்ற இறுதி கலை வடிவம் பற்றிய இணக்கம் என்பவற்றிற்காக நிர்வாகிகளுடனான இன்னுமொரு சூம் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்படும்.

*இறுதிவெளியீடு:*
அனைத்து பணியமர்த்தப்பட்ட கலைஞர்களும் ஓர் தெளிவான, ஆக்கத் திறன்மிக்க படைப்பை பொதுவெளியில் கொண்டுவர வேண்டும். அது ஏற்கனவே இணங்கிக்கொள்ளப்பட்ட, குறித்த நேரத்திற்குள் தயாரிக்கப்பட்ட இறுதி படைப்பாக இருக்கவேண்டும்.

*இறுதிகாட்சிப்படுத்துதல்:*
ஒப்படைக்கப்பட்ட அனைத்து படைப்புக்களும், திட்டத்தின் முடிவில் வரவிருக்கும் காட்சிப்படுத்தல் நிகழ்வில் ஏதோவொரு வகையில் பிரதி நிதித்துவப்படுத்தப்படும்.

இத் திட்டமானது, கலைஞர்கள், குழந்தைகள் மற்றும் சமூகம் ஆகியவற்றினிடையே தொடர்புகளை ஏற்படுத்தி, ஒரு சமூகம் என்ற வகையில் எமக்கு வருகின்ற பொதுவான சவால்களை எதிர்கொள்ள உதவும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

நீங்களும் இந்த கடுமையான சூழலினூடே கடந்து செல்ல குழந்தைகளுக்கு உதவிட விரும்பும் ஒரு கலைஞராக இருப்பின் எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

கேள்விகட்கு பின்வரும் மின்னஞ்சலை தொடர்புகொள்ளுங்கள் பியூமி stageslk@gmail.com

இந்த திட்டத்தைப் பற்றி இன்னும் தெரிந்துகொள்ள பின்வரும் இணைய பக்கத்தை பார்வையிடுங்கள் www.stages.lk